### தங்கம் விலை வரலாறு காணாத உச்சம்

# ஒரே நாளில் பவுனுக்கு ரூ.1,560 உயர்ந்தது

## ரூ.74 ஆயிரத்தை தாண்டியது

**சென்னை, ஜூன் 14:** தங்கம் விலை நேற்று ஒரே நாளில் ரூ.1,560 உயர்ந்து, ஒரு பவுன் ரூ.74,360 என்ற வரலாற்று உச்சத்தை பதிவு செய்தது. தங்கம் விலை அதிரடி உயர்வால் நகை வாங்குவோர் கடும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

தங்கம் விலை இந்த மாதம் தொடக்கத்தில் இருந்து ஏற்றம், இறக்கத்துடனேயே காணப்பட்டு வருகிறது. சில நேரங்களில் அதிரடியாக உயர்வதுமான போக்கும் உள்ளது. இந்நிலையில் கடந்த 7ம் தேதி தங்கம் விலை அதிரடி சரிவை சந்தித்தது. அன்றைய தினம் தங்கம் விலை பவுனுக்கு ரூ.1200 குறைந்து ஒரு பவுன் ரூ.71,840க்கு விற்பனையானது. 8ம் தேதி ஞாயிற்றுக்கிழமை என்பதால் தங்கம் விலையில் மாற்றம் ஏற்படவில்லை. 9ம் தேதி தங்கம் விலை பவுனுக்கு ரூ.200 குறைந்து ஒரு பவுன் ரூ.71,640க்கும், 10ம் தேதி தங்கம் விலை பவுனுக்கு ரூ.80 குறைந்து, ஒரு பவுன் ரூ.71,560க்கும் விற்கப்பட்டது. தொடர்ந்து 3 நாட்களில் தங்கம் விலை பவுன் ரூ.1,480 வரை குறைந்தது. இந்த விலை குறைவு நகை வாங்குவோருக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தி இருந்தது.

இந்நிலையில், கடந்த 11ம் தேதி முதல் தங்கம் விலை அதிகரிக்க தொடங்கியது. 11ம் தேதி மட்டும் தங்கம் விலை பவுனுக்கு ரூ.600 உயர்ந்து ஒரு பவுன் ரூ.72,160 ஆகவும், 12ம் தேதி (நேற்று முன்தினம்) தங்கம் விலை பவுனுக்கு ரூ.640 உயர்ந்து ஒரு பவுன் ரூ.72,800 ஆகவும் விற்பனையானது. இந்நிலையில், நேற்று தங்கம் விலை கிடுகிடுவென உயர்வை சந்தித்தது. அதாவது, நேற்று தங்கம் விலை கிராமுக்கு ரூ.195 உயர்ந்து ஒரு கிராம் ரூ.9,295க்கும், பவுனுக்கு ரூ.1,560 உயர்ந்து ஒரு பவுன் ரூ.74,360க்கும் விற்றது. அதே நேரத்தில் தங்கம் விலை வரலாற்றில் அதிகப்பட்ச விலை என்ற புதிய உச்சத்தையும் பதிவு செய்தது. இதற்கு முன்னர் கடந்த ஏப்ரல் மாதம் 22ம் தேதி ஒரு பவுன் தங்கம் ரூ.74,320 அதிகபட்ச விலையாக இருந்தது. நேற்றைய விலை இதனை முறியடித்துள்ளது. இந்த அதிரடி விலையேற்றம் நகை வாங்குவோரை கடும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. அதே நேரத்தில் கடந்த 3 நாட்களில் மட்டும் தங்கம் விலை பவுனுக்கு ரூ.2,800 உயர்ந்துள்ளது.

வெள்ளி விலை நேற்று கிராமுக்கு ரூ.1.10 உயர்ந்து ஒரு கிராம் ரூ.120க்கும், கட்டி வெள்ளி (ஒரு கிலோ) ரூ.1,100 அதிகரித்து ரூ.1,20,000க்கும் விற்பனையானது. தங்கம், வெள்ளி விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்துள்ளதால் இல்லத்தரசிகள் கடும் அதிர்ச்சிக்கு உள்ளாகி உள்ளனர்.

### சிதம்பரம், விழுப்புரம், உசிலம்பட்டி திமுக நிர்வாகிகளுடன்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் 'ஒன் டூ ஒன்' சந்திப்பு

**சென்னை, ஜூன் 14:** சிதம்பரம், விழுப்புரம், உசிலம்பட்டி தொகுதி திமுக நிர்வாகிகளுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் 'ஒன் டூ ஒன்' சந்திப்பு மூலமாக நேற்று பேசினார். அப்போது சட்டசபை தேர்தல் பணிகளில் சிறப்பாக செயல்பட அறிவுரை வழங்கினார்.

தமிழக சட்டசபை தேர்தலுக்கு இன்னும் 10 மாதங்களே உள்ளன. தேர்தலை எதிர்கொள்ள ஆளுங்கட்சியான திமுக முன்கூட்டியே தயாராகி வருகிறது. அதன் ஒருபகுதியாக 8 மண்டல பொறுப்பாளர்கள், 234 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் தொகுதி பார்வையாளர்களை நியமித்து தமிழகம் முழுவதும் கூட்டங்களை நடத்தி, தேர்தல் பணிகளை முடுக்கி விட்டுள்ளது. இந்த நிலையில் கடந்த 1ம் தேதி மதுரையில் திமுக பொதுக்குழு கூட்டம் நடந்தது. பொதுக்குழு கூட்டத்தில் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின், "என்னைப் பொறுத்தவரையில், நீங்கள் அனைவரும் ஒரு உறுதிமொழியை எடுத்துக் கொள்ள வேண்டும்.

என் வாக்குச்சாவடியில் திமுக கூட்டணியை வெற்றி பெற வைப்பேன்- என் தொகுதி - வெற்றித் தொகுதி என்ற உறுதிமொழியை அனைவரும் எடுத்துக் கொண்டு செயல்பட வேண்டும். பாஜகவிடம் இருந்து தமிழ்நாட்டை காப்பாற்றும் கட்சி கட்டமைப்பும், கொள்கை பிடிப்பும், வலிமையான தலைமையும், நம்மிடம் மட்டும்தான் இருக்கிறது என்று தமிழ்நாட்டில் இருக்கும் சின்ன குழந்தைக்குக்கூட தெரிந்திருக்கிறது. ஆனால், தேர்தல் வெற்றிக்கு இதுமட்டும் போதாது! பூத் அளவில் வெற்றி பெறும் வாக்குகள் தான் தொகுதியில் வெற்றி பெற வைக்கும். தொகுதிகளை வென்றால்தான் ஆட்சி! அதனால், பூத் அளவிலான மைக்ரோ மேனேஜ்மெண்டும் மிக முக்கியம்.

தமிழ்நாடு முழுவதும் எத்தனை உட்கட்டமைப்பு பணிகள் நடந்துகொண்டு இருக்கிறது என்று அவர்களுக்குத் தெரியும். அதெல்லாம் தொய்வில்லாமல் சொன்ன தேதியில் முடிக்கப்பட்டு, செயல்பாட்டுக்கு வர வேண்டும் என்றால், மீண்டும் நம்முடைய ஆட்சி தான் வர வேண்டும் என்று புரிய வையுங்கள். ஜூன் முதல் வாரத்தில் இருந்து, என்னுடைய பணி என்ன என்றால், திமுக நிர்வாகிகளை தொகுதி வாரியாக, அண்ணா அறிவாலயத்தில் நான் சந்திக்க இருக்கிறேன். அப்போது இன்னும் விரைவாக, ஒன் டூ ஒன் பேசுவோம். ஒவ்வொருவருக்கும், ஒவ்வொரு பொறுப்பை நான் வழங்கியிருக்கிறேன். அதை சிறப்பாக-எந்த விமர்சனமும் இல்லாமல், செய்து காட்டினால் அதைவிட எனக்கு மகிழ்ச்சி இருக்க முடியாது" என்றார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தப்படி திமுக நிர்வாகிளுடனான சந்திப்பு தொகுதி வாரியாக சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று தொடங்கியது. "உடன் பிறப்பே வா" என்ற பெயரில் இந்த சந்திப்பு நடந்தது. முதல் நாளான நேற்று சிதம்பரம், விழுப்புரம், உசிலம்பட்டி தொகுதிகளை சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இதில் 3 தொகுதிகளை சேர்ந்த ஒன்றிய, நகர, பேரூர், செயலாளர்கள் மற்றும் தொகுதியின் பொறுப்பாளர், மண்டல பொறுப்பாளர், அமைச்சர் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். ஒரு தொகுதிக்கு அதிகபட்சமாக 7 பேர் அழைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தனித்தனியாக அழைத்து பேசினார். சந்திப்பின் போது அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சட்டப்பேரவை தேர்தல் குறித்தும், வெற்றி வாய்ப்பு தொகுதிகளில் எவ்வாறு இருக்கிறது. மக்கள் திமுக ஆட்சியை பற்றி என்ன நினைக்கிறார்கள். திமுக அரசு செய்த மக்கள் நலன் திட்டங்கள் குறித்து மக்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள். மக்கள் இன்னும் என்ன அரசிடம் இருந்து எதிர்ப்பார்க்கிறார்கள், தொகுதிகளில் எம்எல்ஏக்களின் செயல்பாடு எப்படி உள்ளது. தற்போதுள்ள எம்எல்ஏ பற்றி என்ன கூறுகிறார்கள் என்று கருத்துக்களை கேட்டதாக கூறப்படுகிறது. வருகிற தேர்தலில் இந்த தொகுதிகளில் கூடுதல் கவனம் செலுத்தி தேர்தல் பணியாற்ற வேண்டும். கூட்டணி கட்சிகள் வெற்றி பெற தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுரை வழங்கியதாக கூறப்படுகிறது. நிர்வாகிகள் தெரிவிக்கும் கருத்துக்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் கவனமுடன் கேட்டு தெரிந்து கொண்டார். நிர்வாகிகள் தெரிவிக்கும் கருத்துக்களின் அடிப்படையில் முதல்வர் மு.க.ஸ்டாலினின் நடவடிக்கை இருக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. தொகுதி வாரியாக நிர்வாகிகளை ஒன் டூ ஒன் மூலமாக முதல்வர் மு.க.ஸ்டாலின் சந்தித்து வருவதால் திமுகவினர் மகிழ்ச்சியில் உள்ளனர். முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடர்ந்து 234 தொகுதி நிர்வாகிகளையும் சந்தித்து பேச உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### சட்டசபை தேர்தல் பணிகளில் சிறப்பாக செயல்பட அறிவுரை

▶ ஒன் டூ ஒன் சந்திப்பின் முதல்கட்டமாக சிதம்பரம், விழுப்புரம் மற்றும் உசிலம்பட்டி ஒன்றிய, நகர, பேரூர் திமுக செயலாளர்கள், நிர்வாகிகளை நேற்று தனித்தனியாக அழைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார். அருகில், அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்பு செயலாளர்கள் தாயகம் கவி, ஆஸ்டின்.

### கருத்துக்களை தெரிவிக்க கருத்து பெட்டி

சட்டப்பேரவை தொகுதி வாரியாக திமுக நிர்வாகிகளுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் 'ஒன் டூ ஒன்' சந்திப்பை நேற்று முதல் தொடங்கியுள்ளார். முதல் நாளான நேற்று சிதம்பரம், விழுப்புரம், உசிலம்பட்டி தொகுதி திமுக நிர்வாகிகளை சந்தித்து பேசினார். அப்போது சட்டசபை தேர்தல் பணிகளில் சிறப்பாக செயல்பட அறிவுரை வழங்கினார். 234 சட்டமன்ற தொகுதி வாரியாக முதல்வர் மு.க.ஸ்டாலின் நிர்வாகிகளை சந்திக்க உள்ளார். இந்த நிலையில் ஒன் டூ ஒன் நிகழ்ச்சியில் பங்கேற்க வரும் நிர்வாகிகள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்கும் வகையில் கருத்து பெட்டி வைக்கப்பட்டுள்ளது. அதில் நிர்வாகிகள் தங்களுடைய கருத்தை எழுதி அந்த பெட்டியில் போட்டு வருகின்றனர்.

# தமிழ்நாட்டில் குழந்தைகள், பெண்களுக்கு எதிரான குற்றச்சம்பவங்கள் மிகவும் குறைவு

### டிஜிபி நேர்காணலை சுட்டிக்காட்டி முதல்வர் டிவிட்

**சென்னை, ஜூன் 14:** தமிழ்நாட்டில் குழந்தைகள், பெண்களுக்கு எதிரான குற்றச்சம்பவங்கள் மிகவும் குறைவு என்ற தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் தரவுகளை சுட்டிக்காட்டி காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால் நேர்காணல் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு:

தமிழ்நாட்டில் குழந்தைகள், பெண்களுக்கு எதிரான வன்முறை பெருகிவிட்டதாக பரப்பப்படும் அடிப்படையற்ற விஷமப் பிரசாரங்களுக்கு பதிலடி தரும் வகையில் அமைந்துள்ள தமிழ்நாடு டிஜிபி நேர்காணலை பகிர்கிறேன். NCRB தரவுகளின் படி குழந்தைகள், பெண்களுக்கு எதிரான குற்றச்சம்பவங்கள் மிகவும் குறைவாக நடைபெறும் மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு இருக்கிறது.

அதே நேரம், போஸ்கோ குற்றங்களை எந்தவித அச்சமும் இல்லாமல், காவல்நிலையத்தில் நம்பிக்கையோடு புகார் அளிக்கும் விழிப்புணர்வு அதிகரித்து வருகிறது.

அச்சமின்றி புகார் அளித்தால்தான், குற்றவாளியை முதல் குற்றத்தின்போதே கைது செய்து தண்டனை பெற்றுத்தர முடியும். இத்தகைய நபர்கள் மேலும் குற்றங்களில் ஈடுபடாமல் தடுக்க இது மிக அவசியம். ஏற்கனவே நான் கூறியது போல, குழந்தைகள் பெண்களுக்கு எதிரான குற்றங்களில் Zero Tolerance விரைவான விசாரணை - அதிகபட்ச தண்டனை - முன்விடுதலை இல்லை என்பதே நமது அரசின் கொள்கை.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## 'பகைக் கூட்டத்தை மக்களின் துணை கொண்டு வீழ்த்திடுவோம்'

**சென்னை, ஜூன் 14:** தமிழ்நாட்டின் நலனுக்கு ஊறு விளைவிக்க திட்டமிடும் பகைக் கூட்டத்தை மக்களின் துணை கொண்டு வீழ்த்திடுவோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு:

தமிழ்நாட்டின் வரலாற்றில் இல்லாத அளவிற்கான வளர்ச்சியை சாத்தியப்படுத்தியுள்ள நமது திராவிட மாடல் அரசு செய்துள்ள சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்த்திடவும் - தமிழ்நாட்டை வீழ்த்த துடிக்கும் வீணர்களுக்கு தோல்வியை பரிசளித்து விரட்டிடவும் - வலிமையான கழக கட்டமைப்புக்கு ஊக்கம் தந்து களப்பணியாற்றிட உடன்பிறப்பே வா! தமிழ்நாட்டின் நலனுக்கு ஊறுவிளைவிக்க திட்டமிடும் பகைக் கூட்டத்தை மக்களின் துணைகொண்டு வீழ்த்திடுவோம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# நீலகிரியில் இன்று அதி கனமழை பெய்யும்

**சென்னை, ஜூன் 14:** மேற்கு திசை காற்று காரணமாக தமிழகத்தில் ஒரு சில இடங்களில் நேற்று மழை பெய்துள்ளது. சில இடங்களில் வறண்ட வானிலை காணப்பட்டது. அதிகபட்ச வெப்பநிலையை பொறுத்தவரையில் ஓரிரு இடங்களில் இயல்பைவிட 2 டிகிரி செல்சியஸ் முதல் 3 டிகிரி செல்சியஸ் வரையில் நேற்று அதிகரித்து காணப்பட்டது.

இந்நிலையில், மேற்கு மற்றும் வட மேற்கு திசையில் இருந்து வீசிய காற்று காரணமாக தமிழகத்தில் கோவை மாவட்ட மலைப் பகுதிகள், நீலகிரி மற்றும் அதன் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் கனமழை முதல் மிக கனமழை பெய்தது.

இதற்கிடையே, வடக்கு கர்நாடகா-தெலங்கானா-ஆந்திரா பகுதிகளின் மேல் ஒரு வளி மண்டல மேலடுக்கு சுழற்சி நிலை கொண்டுள்ளது. மேலும், தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளி மண்டல கீழடுக்கு சுழற்சியும் நிலை கொண்டுள்ளன. இதன் காரணமாக தமிழகத்தில் நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் இன்றும் நாளையும் கனமழை முதல் மிக கனமழை பெய்யும் வாய்ப்புள்ளது. அதனால் அந்த மாவட்டத்துக்கு ரெட் அலர்ட் விடப்பட்டுள்ளது.

மேலும் கோவை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் மலைப் பகுதிகள், தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்றும் நாளையும் கனமழை முதல் மிக கனமழையும் பெய்யும். தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் இன்ற ஓரிரு இடங்களில் கனமழை பெய்யும். 16ம் தேதி முதல் 19ம் தேதி வரை தமிழகத்தில் இதே நிலை நீடிக்கும்.

இந்நிலையில், இன்றும் நாளையும் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதை ஒட்டிய குமரிக் கடல் பகுதிகளில் சூறாவளிக் காற்று மணிக்கு 55 கிமீ வேகத்தில் வீசும். 16, 17ம் தேதிகளில் தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதை ஒட்டிய குமரிக் கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 55 கிமீ வேகம் முதல் 65 கிமீ வேகத்தில் வீசும். மேலும் தென்மேற்கு வங்கக் கடலின் அனேக பகுதிகள், மத்திய வங்கக் கடலின் தெற்கு பகுதிகள், வடக்கு அந்தமான் கடல் பகுதிகளில் சூறாவளிக் காற்று மணிக்கு 65 கிமீ வேகத்தில் வீசும். அதனால் மேற்கண்ட பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகின்றனர்.

நீலகிரி மாவட்டத்தில் இன்று அதிகனமழை பெய்யும் வாய்ப்புள்ளதால் அந்த மாவட்டத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகளை அரசு மேற்கொண்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக பள்ளிகளுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

### தேச துரோக குற்றச்சாட்டில் விதிக்கப்பட்ட

## சிறை தண்டனையை எதிர்த்து வைகோ மனு

### உயர் நீதிமன்றத்தில் 27ல் இறுதி விசாரணை

**சென்னை, ஜூன் 14:** கடந்த 2009 ஜூலை 15ம் தேதி, 'நான் குற்றம் சாட்டுகிறேன்' என்ற புத்தக வெளியீட்டு விழாவில் பேசிய மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பை ஆதரித்தும், இந்திய இறையாண்மைக்கு எதிராகவும் பேசியதாக தேசத்துரோகம் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் ஆயிரம்விளக்கு காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த சென்னை சிறப்பு நீதிமன்றம், வைகோவுக்கு ஓராண்டு சிறை தண்டனையும் 10 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தது.

இந்த தீர்ப்பை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வைகோ தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு, நீதிபதி பி.வேல்முருகன் முன் விசாரணைக்கு வந்தது. வழக்கின் இறுதி விசாரணையை வரும் 27ம் தேதிக்கு நீதிபதி தள்ளிவைத்தார்.

### 19 மாவட்டங்களில் 25 இடங்களில்

# ரூ.1,018 கோடியில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் விரைவில் திறக்கப்படும்

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு

**சென்னை, ஜூன் 14:** தமிழ்நாட்டில் 19 மாவட்டங்களில் 25 இடங்களில் ரூ.1,018 கோடி செலவில் கட்டப்பட்டு வரும் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் விரைவில் திறக்கப்படும் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறினார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று சென்னையில், மகப்பேறு மயக்கவியல் தர மேம்பாட்டிற்கான மருத்துவ பயிலரங்கத்தை தொடங்கி வைத்து, மயக்கவியல் துறையில் சிறப்பாக பணியாற்றிய மருத்துவர்களுக்கு விருதுகள் வழங்கினார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

மகப்பேறு காலங்களில் தாய்மார்கள் மரணங்களை குறைக்கும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக எடுக்கப்பட்டு வருகிறது. இந்த அரசு பொறுப்பேற்ற 2021-22ல் ஒரு லட்சம் பிறப்புகளுக்கு தாய்மார்களின் இறப்பு விகிதம் 90.5ஆக இருந்தது. 2022-23ல் 52ஆக குறைந்தது. 2023-24ல் 45.5 என்கின்ற அளவில் குறைந்து, கடந்த ஆண்டு இன்னமும் சரிந்து 39.6 ஆக குறைந்திருக்கிறது. அதேபோல் குழந்தை மரண விகிதம் 1000 பிறப்புகளுக்கு 2021-22ல் 10.4ஆக இருந்தது. 2024-25ல் 7.4 ஆக குறைந்திருக்கிறது. அடுத்தடுத்த ஆண்டுகளில் மகப்பேறு இறப்பு விகிதமும், குழந்தைகளுக்கான இறப்பு விகிதமும் வெகுவாக குறைந்து பூஜ்ஜிய நிலைக்கு செல்லும்.

கடந்த 3 மாதங்களுக்கு முன்னால் தமிழ்நாட்டில் இருந்த ஒட்டுமொத்த காலிப்பணியிடங்களை நிரப்பும் முயற்சியாக 2642 மருத்துவர் பணியிடங்கள் ஒரே நாளில் நிரப்பப்பட்டது. பணி ஆணைகள் தரப்படும்போது இந்தியாவில் முதன்முறையாக அவர்களுக்கு கலந்தாய்வு வைக்கப்பட்டு அவரவர் விரும்பும் இடங்களுக்கே பணிஆணைகள் தரப்பட்டது.

208 நகர்ப்புற நல வாழ்வு மையங்கள் மற்றும் 50 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை முதல்வர் விரைவில் பயன்பாட்டிற்காக கொண்டு வருகிறார். அதோடு மட்டுமல்லாமல், ஒரே நேரத்தில் தமிழ்நாட்டில் 19 மாவட்டங்களில் 25 இடங்களில் மாவட்ட தலைமை மருத்துவமனைகள் கட்டும் பணிகள் நடந்து கொண்டிருக்கிறது. அதற்கான பணியாளர்களை தேர்வு செய்து, இன்னும் 3 மாத காலங்களில் ரூ.1,018 கோடி செலவில் 25 இடங்களில் கட்டப்பட்டு வரும் இந்த மருத்துவமனைகளும் விரைவில் திறந்து வைக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

### தொழிலதிபரை மிரட்டி பணம் கேட்டதாக புகார்

# பிரபல ரவுடி மிளகாய் பொடி வெங்கடேஷ் கைது

### அமித்ஷாவுடன் புகைப்படம் எடுத்து போலீசாரை மிரட்ட நினைத்தவர் சிக்கினார்

**சென்னை, ஜூன் 14:** சென்னை செங்குன்றம் அருகே பாடிய நல்லூர், பி.டி.மூர்த்தி நகர், வீரவாஞ்சிநாதன் தெருவை சேர்ந்தவர் கே.ஆர்.வெங்கடேஷ். தமிழக பாஜவில் மாநில ஒபிசி அணி செயலாளராக இருந்து வருகிறார். இவர் மீது ஆந்திரா, தெலங்கானாவில் செம்மரகடத்தல் வழக்குகள், ஆவடி காவல் ஆணையரகத்தில் பணமோசடி, துப்பாக்கி வைத்து மிரட்டியது உள்பட பல்வேறு குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன.

மேலும், கடந்த தேர்தல் நேரத்தில் பணப் பட்டுவாடா தொடர்பாக, இவரது வீட்டில் பணம் பதுக்கி வைத்துள்ளாரா? என்று தேர்தல் பறக்கும் படையினரும் சோதனை நடத்தியுள்ளனர். பின்னர், சில மாதங்களுக்கு முன்னர் நிலமோசடி தொடர்பாக ஆவடி மத்திய குற்றப்பிரிவு போலீசார், மிளகாய் பொடி வெங்கடேஷை கைது செய்து சிறையில் அடைத்தனர். ஆனால், ஜாமீனில் வெளியில் வந்த பிறகு வெங்கடேஷ் தொடர்ந்து மிரட்டல் மற்றும் முறைகேடுகளில் ஈடுபடுவதாக போலீசாருக்கு புகார்கள் வந்த வண்ணம் உள்ளன.

இந்நிலையில், நேற்று காலை செங்குன்றம் உதவி ஆணையர் ராஜா ராபர்ட், எண்ணூர் உதவி ஆணையர் வீரக்குமார் தலைமையில், பாடியநல்லூரில் உள்ள கே.ஆர்.வெங்கடேஷ் வீட்டுக்கு போலீசார் விரைந்து சென்றனர். அங்கு வீட்டில் இருந்த கே.ஆர்.வெங்கடேஷை கைது செய்து ஜீப்பில் செங்குன்றம் காவல் நிலையத்துக்கு அழைத்து வந்து, தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.

இதனிடையே, ஆவடி காவல் ஆணையரக அலுவலகத்தில் நேற்று முன்தினம் பேனாசோனிக் டீலர் தீபன் சக்கரவர்த்தி ஒரு புகார் அளித்தார். அதில், பேனாசோனிக் கம்பெனியின் டீலராக உள்ளேன். ரூ.50 லட்சம் அளவுக்கு கணபதிலால் என்பவருக்கு பொருட்கள் சப்ளை செய்தேன். அந்த பணத்தை அவர் கொடுக்கவில்லை. அதேபோல, கணபதிலாலுக்கு கோகுல்தாஸ் என்பவரும் பொருட்கள் சப்ளை செய்துள்ளார். அதற்கும் பணம் வரவில்லை. இருவரும் சேர்ந்து ரவுடி மிளகாய் பொடி வெங்கடேஷிடம் சென்று பணத்தை வாங்கித் தரும்படி கூறினோம். அவரும் பணம் வாங்கித் தருகிறேன். தனக்கு 10 சதவீதம் கமிஷன் தரவேண்டும் என்றார்.

நாங்களும் சம்மதித்து முதலில் ஒரு லட்சம் ரூபாய் கொடுத்தோம். அதன்பின்னர், அவர் பணம் வாங்கித் தர எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால், நாங்கள் அவரிடம் செல்வதை நிறுத்திவிட்டோம். ஆனால் அவர் கணபதிலாலுடன் கூட்டுச் சேர்ந்து எங்களை மிரட்டி பணம் பறிக்க தொடங்கினார். இதனால் அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறி இருந்தார்.

இந்த, புகாரின்பேரில் பாஜ பிரமுகர் வெங்கடேஷை, போலீசார் நேற்று காலையில் வீட்டில் வைத்து கைது செய்தனர். அவரிடம் ஆவடி மத்திய குற்றப்பிரிவு போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். அண்மையில் மதுரைக்கு வந்திருந்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை, கே.ஆர்.வெங்கடேஷ் நேரில் சந்தித்து, அந்த புகைப்படங்களை பல்வேறு சமூக வலைதளங்களில் பதிவிட்டுள்ளார்.

அதோடு ஆவடி போலீஸ், தமிழக காவல் துறை, ஆந்திரா, தெலங்கானா காவல்துறை ஆகியோரை டேக் செய்து டிவிட்டர் மெசேஜ் வெளியிட்டிருந்தார். வழக்குகள் உள்ள போலீசாரை டேக் செய்ததன் மூலம், அவர் மீதான வழக்குகளை மிரட்டி ஒன்றும் இல்லாமல் செய்வதற்கான மிரட்டல் என்றே போலீஸ் அதிகாரிகள் கருதினர். இதற்கிடையில் தற்போது, அவர் முறைகேடு புகாரில் சிக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.


**க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்**
(முன்னதாக பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது)

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், பி பில்டிங், கங்கா ட்ரூனோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலகு: இரண்டாவது தளம், பி.பிளாக், எண்.5, ஆர்ஜே பிளாசா, காட்பாடி பிரதான சாலை, பாலர் பாலம் அருகே, விருதம்பட்டு, வேலூர்-632006.

**மின்-ஏலம்-விற்பனை அறிவிப்பு**
சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8&9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு. இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (முன்னதாக பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது. பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயர் க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று 17 நவம்பர் 2023 தேதியிலிருந்து மாற்றப்பட்டுள்ளது (முன்னதாக மக்மா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற அறியப்பட்டது முதலில் ஜீ மனி ஹவுசிங் பைனான்ஸ் ப்ளிக் லிமிடெட் கம்பெனி என்ற பெயருடைய நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது) இதற்குப் பிறகு கடனீட்டு கடனீந்தோர் என்று சட்டத்தின்படி குறிப்பிப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி கவனதீனம் செய்துள்ளார். கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் மின்-ஏலம் மூலமாக நிரல் (J) இல் குறிப்பிட்டுள்ள நாளில் விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்- ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்-ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

| வ. எண் | முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் {A} | கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் நிலுவைத் தொகை {B} | சுவாதீனத் தன்மை {C} | சொத்தின் விவரம் {D} | நிர்ணய விலை {E} | முன்வைப்புத் தொகை (நிர்ணய விலையில் 10%) {F} | முன்வைப்புத் தொகை செலுத்தும் {G} | ஏல உயர்வு